**செய்தி வெளியீட்டு எண்.366** **நாள்: 8.7.2009**

## பத்திரிக்கை செய்தி

## உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டு திட்டம்

சுமார் 1 கோடி ஏழை எளிய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் உயிருக்கு ஆபத்தான இருதய நோய், புற்றுநோய், சிறுநீரக நோய், மூளை மற்றும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய் போன்ற 51 நோய்களுக்கு ரூ.1 லட்சம் வரையில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் இலவச உயர்சிகிச்சை பெற வகை செய்யும் **‘உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம்’** ரூபாய் 520 கோடி செலவில் மிக விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காப்பீட்டுத் தொகையாக நடப்பு ஆண்டில் ரூபாய் 520 கோடியை தமிழ்நாடு அரசு வழங்குகிறது. இந்த திட்டம் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகின்ற ஜூலை 23–ம் தேதி தொடங்கி வைக்க உள்ளார்.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

*************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9